**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial

## (Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**24.02.2026.** CC. 25/2015 PW.7 திரு.ரமேஷ் கண்ணன்

**கடந்த 18.02.2025 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற M.P. No. 17/2025, dated 25.11.2025 ன் படி கு.வி.மு.ச 1973 பிரிவு 311 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மையானது கு.வி.மு.ச பிரிவு 317(1)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

மேற்படி சாட்சியானவர் தற்சமயம் விருதுநகர் மாவட்டம், சேத்தூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வரும் நிலையில் வழக்கின் விசாரணையை துரிதப்படுத்தும் விதமாக மேற்படி சாட்சி விசாரணையை மாண்பு மிகு சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய காணொலிகாட்சி வசதி மூலம் (Micro Soft Teams) பதிவு செய்கிறது. மேற்படி சாட்சியானவர் இன்றைய தினம் மாண்பு மிகு விருதுநகர் மாவட்ட நீதிமன்றம், இருப்பு ஸ்ரீவல்லிபுத்தூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள காணொலி காட்சி அறையில் இருந்து சாட்சியம் அளிக்கிறார். மேற்படி விசாரணையின் போது அரசு தரப்பு வழக்கறிஞரும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்கள்.

**பொதுவான குறுக்கு விசாரணை**

1. நான் சம்பவ இடத்தை பார்வையிடாமலும் வழக்கின் புலன் விசாரணை சரிவர செய்யாமலும் ஆவணங்களை நிலையத்தில் வைத்து வழக்கிற்கு தகுந்தார் போல் தயார் செய்து அதன் அடிப்படையில் உண்மைக்கு மாறான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும்,, வழக்கு சம்பவத்திற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு மேற்படி சாட்சியானவர் மேற்படி காணொலி காட்சி அறையில் இருந்து திருமதி,தெய்வானை, இளநிலை உதவியாளர் முன்னிலையில் அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.